செ.வெ.எண்: 71 / ஜுலை / 2021 நாள்:20.07.2021

# செய்திக்குறிப்பு

**அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, ஸ்ரீரங்கம்**

ஸ்ரீரங்கம், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் **2021–2022**ம் கல்வியாண்டில் இக்கல்லூரியில் **(Code no: 136)** டிப்ளமோ நேரடி இரண்டாமாண்டில் சேர விரும்பும் +2 அல்லது ITI தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்கள் **http://www.tngptc.in or http://www.tngptc.com** என்ற இணையதளத்தில் **05-08-2021** வரை விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்யலாம். மேற்கண்ட இணையதளத்தில் அனைத்துத் தகவல்கள், வழிகாட்டி மற்றும் கால அட்டவணை போன்ற விவரங்கள் மாணவர்கள் தெரிந்துக் கொள்ளலாம். மாணாக்கர்கள் இணையதள வாயிலாகவோ அல்லது இக்கல்லூரியில் செயல்படும் சேவை மையத்தின் (Tamilnadu Polytechnic Admission Facilitation Centre – TPAFC No. 46) மூலமாகவோ விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே கொரனோ நோய்த்தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி செயல்படும் இச்சேவை மையத்தை உடன் அணுகி, அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் சேர விரும்பும் அனைத்து மாணவ, மாணவியர்களும் பயனடையலாம் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. பதிவுக்கட்டணம் ரூ.150/–ஐ விண்ணப்பதாரர் Debit card / Credit card, Net Banking இணையதள வாயிலாக செலுத்தலாம். SC/ST பிரிவினர் பதிவுக்கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவா் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளாா்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநா்,**
**செய்தி மக்கள் தொடா்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**